2011 பிப்ரவரி 7]

வட்டாரத்தில் உள்ள, பெருந்துறை தொகுதியிலுள்ள மேற்படி மையங்களுக்கும் எதிர்வரும் காலத்தில் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

மீன் அங்காடி

***120761—திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அச்சரப்பாக்கம் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சியில் குளிர்சாதன வசதியுடன் மீன் அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீனவ சமுதாயத்தினுடைய தலைவர் சிந்தனைச் சிற்பி திரு. மா. சிங்காரவேலர் அவர்களுடைய பெயரில் தமிழகத்தின் வரலாற்று முதல்வர் அய்யா மாண்புமிகு கலைஞர் அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சியரின் மாளிகைக்குச் சிந்தனைச் சிற்பி திரு. மா. சிங்காரவேலர் அவர்களின் பெயரைச் சூட்டியும், மாளிகையின் எதிரே அவருடைய திருவுருவச் சிலையை அமைத்தும், மீனவ மக்களுக்கும், சிந்தனைச் சிற்பி திரு. மா. சிங்காரவேலருக்கும் பெரும் புகழைச் சேர்த்தார்கள்.

இன்று, நம்முடைய தமிழகத்தின் வரலாற்று முதல்வர் அய்யா மாண்புமிகு கலைஞர் அவர்கள், மீனவ சமுதாயத்தினுடைய தலைவர் சிந்தனைச் சிற்பி திரு. மா. சிங்காரவேலர் அவர்களுடைய பிறந்த நாளை அரசு விழாவாக ஆண்டாண்டுக்காலம் கொண்டாடுவதாக (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்து, மீனவ

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS

மக்களுக்கு மேலும் பெருமை சேர்த்திருக்கின்ற நம்முடைய தமிழகத்தின் வரலாற்று முதல்வர் அய்யா மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு மீனவ மக்களின் சார்பாகவும், மீன்வளத் துறையின் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியை இந்த அவையில் பதிவு செய்வதிலே நான் பெருமைப்படுகிறேன். நம்முடைய அச்சரப்பாக்கம் தொகுதி உறுப்பினர் திருமதி சங்கரிநாராயணன் அவர்கள் எழுப்பியிருக்கின்ற வினாவிற்கு பதில், காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சிப் பகுதியில் ஆறு மீனவ கிராமங்கள் உள்ளன. இம்மீனவ கிராமங்களில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் அவ்வப்பொழுதே விற்பனையாகிவிடுவதால், அரசுமூலம் குளிர்சாதன வசதியுடன்கூடிய மீன் அங்காடி அமைக்கும் வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி நேரத்தில் முதலில் பத்து வினாக்கள் இடம் பெற்றிருந்தன. அவற்றில் ஏழு கேள்விகள் பெண்களுக்காக என்று ஒதுக்கப்பட்டிருந்தன. தன்னுடைய உணர்வுகளும், எண்ணங்களும், பெண்களின் முன்னேற்றத்திற்காக, பெண்களின் வாழ்வு உயர்வதற்காக தொடர்ந்து அரசையும், திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தையும் அர்ப்பணித்து வரும் தமிழினத் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் தளபதி அவர்களும் இப்பொழுது எனக்கு இப்படி ஒரு வாய்ப்பைக் கொடுத்ததை உணருகிறபோது 33% இட ஒதுக்கீடு சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும், இடம் பெறுவதற்கு முன்னோட்டமாக அமைந்திருக்கிறதோ என்ற உணர்வோடு தமிழனத் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் தளபதி அவர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அச்சரப்பாக்கம் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சியில் கிழக்குக் கடற்கரை சாலையில் அமைந்துள்ள கடப்பாக்கம் குப்பம், கடப்பாக்கம், ஆலம்பரை குப்பம், பனையூர் சின்னக்குப்பம், பனையூர் பெரியகுப்பம், தழுதாளிக்குப்பம், முட்டுக்காடு கிராமம் போன்ற மீனவக் குப்பங்களில் வாழும் மீனவ மக்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களைக் குப்பங்கள் வழியாக, பக்கிங்காம் கால்வாய் வழியாக கிழக்குக் கடற்கரைச் சாலையை அடைந்து, அதன் வழியாக பல்வேறு

2011 பிப்ரவரி 7]

பகுதிகளுக்குச் சென்று மீன்களை விற்பனை செய்ய வேண்டிய நிலைமை உள்ளது. விற்பனை செய்ய முடியாத மீன்களைக் கெடாமல் பாதுகாக்க அவர்களால் முடியவில்லை. ஆகவே, பிடிக்கும் மீன்களைக் கெடாமல் பாதுகாத்து விற்பனை செய்திட, அங்கு குளிர்சாதன அங்காடி அல்லது குளிர்சாதனக் கிடங்கினை அமைத்துத் தர, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறுகின்ற அச்சரப்பாக்கம் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சியில் ஆறு மீனவ கிராமங்கள் உள்ளன. இவற்றில் 312 மீன்பிடி நாட்டுப் படகுகள் கொண்டு, அந்தப் பகுதி மீனவர்கள் மீன் பிடித்து வருகின்றார்கள். ஒரு நாட்டுப் படகின்மூலமாக சராசரியாக 10 முதல் 25 கிலோ வரையில் மீன் பிடிக்கப்படுகிறது. ஆக, மொத்தம் ஒரு நாளைக்கு சுமார் 6,000 கிலோ வரையில் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அவை அனைத்தும் கடற்கரையில் பொது ஏலத்தின்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. பொது ஏலத்தின்மூலம் மீன்கள் விற்பனை செய்யப்படுவதால், மீனவர்கள் அதிக இலாபம் கிடைப்பதாகக் கருதுகின்றார்கள். படகுகளும் வெவ்வேறு நேரங்களில் கரை திரும்புவதாலும், மீன்கள் அவ்வப்போது விற்பனையாகி விடுவதாலும், அங்கு அரசுமூலம் குளிர்சாதன வசதியுடன்கூடிய மீன் அங்காடியை அமைக்கின்ற வாய்ப்பு இல்லை.*

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.*

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையூர் பெரியகுப்பம் என்னும் இடத்தில் மீனவ மக்கள் சுனாமிக்கு முன்பாக குடிசை போட்டு வாழ்ந்து வந்தார்கள். அந்தக் குடிசைகள் எல்லாம் சுனாமியால் தூக்கி வீசப்பட்ட பிறகு, அந்த மீனவ மக்களுக்கு அந்த இடத்தைப் பட்டா செய்து தர வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் அப்போது வைத்திருந்தேன். அது கடற்கரையோரமாக அமைந்திருக்கிறது, 500 மீட்டர் பக்கத்திலே இருக்கிறது என்ற*

TRUTH ALONE TRIUMPHS

[2011 பிப்ரவரி 7

காரணத்தைக் கூறி அந்த இடத்திற்குப் பட்டா அளிக்க முடியவில்லை என்று கூறியிருக்கின்றார்கள். என்றாலும், அந்த இடத்தில் மீன் உலர்களமாவது அமைத்துத் தர நான் முயற்சி செய்து வந்தேன். இப்போது குளிர்சாதன வசதி செய்து மீன் அங்காடி அமைப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றால், இந்தப் பனையூர் பெரியகுப்பத்தில் உள்ள இடத்தில் மீன் உலர்களமாவது அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறு கின்ற அந்த இடத்தில் மீன் உலர்களம் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

பால் பவுடர்

***123138—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்